இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 178 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 25 – வியாழக்கிழமை 08 பிப்ரவரி 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 178 : Thiruvalluvar Year - 2055 - Thai 25 - Thursday 08 February 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டின் கெஸ்டாம்ப் (Gestamp), டால்கோ (Talgo) மற்றும் மேப்ட்ரி (Mabtree) ஆகிய நிறுவனங்களின் உயர் நிர்வாகிகளுடன் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து சந்தித்துப் பேசினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், ஸ்பெயின் நாட்டின் எடிபன் நிறுவனத்துடன் ரூ.540 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, எடிபன் நிறுவனத்தின் உயர் அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

### தன்னிச்சையான - பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி

# நிதி நிர்வாகத்தில் மாநிலங்களின் குரல் வளையை நெரிப்பதா?

## கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராகத் தொடுத்துள்ள வழக்கில் தமிழ்நாடு அரசு துணை நிற்கும்! கேரள முதல்வருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 8-**

**"மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் ஒன்றிய அரசு தலையிடுவதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பினை அளிக்கும்" என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு நேற்று முன்தினம் (6.2.2024) எழுதியுள்ள கடிதத்தில், மாநில அரசுகளின் நிதி நிருவாகத்தில் தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தி, மாநிலங்களின் குரல்வளையை நெரிக்க ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்த்து, மாண்பமை உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ள கேரள அரசுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளதோடு, இந்த விஷயத்தில் தமிழ்நாடு அரசு தனது முழு





ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**தெளிவான ஒருமித்த கருத்து உருவாகியுள்ளது!**

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள அந்தக் கடிதத்தில், ஒன்றிய அரசு சில காலமாகவே மாநில அரசுகளுக்கு எதிராக இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், கடந்த சில ஆண்டுகளில் நிலைமை வேகமாக மோசமடைந்துள்ளது என்றும், மாநிலங்களின் நிதி நிர்வாகத்தில் இத்தகைய மறைமுகக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் முற்போக்கான மாநிலங்களிடையே தெளிவான, ஒருமித்த கருத்து உருவாகியுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றும், இருப்பினும், மாநிலங்கள் கடன் வாங்குவதற்கா ன வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரிவின்படி, ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஷரத்து, மாநில அரசின் நிதிப் பொறுப்பு மற்றும் வரவுசெலவு மேலாண்மை விதிகளின்படி வரையறுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை நேர் செய்யும் மாநில அரசின் முனைப்புகளை தடுக்கும் கருவியாக ஒன்றிய அரசால் மாற்றப்பட்டுள்ளதாகவும், இதன் விளைவாக அரசமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்கள் கருதிய நிதிக் கூட்டாட்சியின் அடிப்படைக்கே மாபெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும் தனது கடிதத்தில் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஒன்றிய அரசின் பின்னடைவை ஏற்படுத்தும் போக்கு!**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஒன்றிய அரசின் இத்தகைய நடவடிக்கைகள், மாநில அரசின் முன்முயற்சிகளுக்கு நிதி திரட்டுவதில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் புள்ளி விவரங்களுடன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

முதலாவதாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்ச வரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# தமிழ்நாட்டுக்குரிய நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்க மறுப்பு !

## கண்டித்து மக்களவையில் தி.மு.க. உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு! டி.ஆர்.பாலு – ஆ.இராசா ஆவேசம் !

**புதுடெல்லி, பிப். 8-**

**தமிழ்நாட்டிற்குரிய நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்க மறுப்பதற்கு கண்டனம் தெரிவித்து நாடாளுமன்ற மக்களவையிலிருந்து "இந்தியா" கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு செய்தன. நிவாரண நிதியை வழங்க மறுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, கொறடா ஆ.இராசா ஆகியோர் ஆவேசமாகப் பேசினர்.**





தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு குறித்து நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு உரையாற்றினார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ள பாதிப் பின்போது வானிலை ஆய்வு மையம் உரிய முன்னெச்சரிக்கை தரவில்லை என்று குற்றம் சாட்டினார்.

இதனால் ரயிலில் ஆயிரக்கணக்கான பயணிகள் தவிக்கும் நிலை ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. வெள்ள பாதிப் பின்போது வானிலை மையத்தின் கணிப்புகள் முற்றிலுமாக தோல்வியடைந்தன. சென்னை வானிலை ஆய்வு மையம் மேம்படுத்தப்படாததால் உரிய முன்னெச்சரிக்கையை வழங்கவில்லை. சென்னை வானிலை ஆய்வு மையத்தில் நவீன உபகரணங்கள் இல்லை. உரிய முன்னெச்சரிக்கை இல்லாததால் ஆயிரக்கணக்கான பயணிகள் ரயிலில் தவிக்கும் நிலை ஏற்பட்டது.

**டி.ஆர்.பாலு எம்.பி. கண்டனம்!**

டி.ஆர்.பாலு எம்.பி. பேசிக்கொண்டிருக்கும் போது ஒன்றிய அமைச்சர்கள் குறுக்கிட்டு பேசியதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. கண்டனம் தெரிவித்தார். டி.ஆர்.பாலு எம்.பி. பேசிக்கொண்டிருக்கும் போது, ஒன்றிய இணையமைச்சர்கள் நித்யானந்த் ராய், எல்.முருகன் ஆகியோர் குறுக்கீடு செய்தனர். அதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து அவையில் அமளி ஏற்பட்டது. ஆனால் வெள்ள நிவாரணம் தொடர்பாக ஒன்றிய அரசு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

வெள்ள நிவாரண நிதி குறித்து பதிலளிக்காததால் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளும் வெளிநடப்பு செய்தது. தமிழ்நாட்டிற்கு உரிய வெள்ள நிவாரணம் வழங்காததை கண்டித்தும், அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு பதில் அளிக்காததை கண்டித்தும் தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மேலும், காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்